நாளும் ஒரு திருமுறை

THIRUMURAI A DAY

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்தர் அற்புதம்

## திருக்கோலக்கா




பதிக வரலாறு :

ஞானபோனகராகிய பிள்ளையார் தமது காழித் தந்தையாரையும் ஞானப்பால் தந்த தாயாரையும் வணங்கிப் பக்கத்திலுள்ள திருக்கோலக்காவிற்கு வழிபடச் சென்றார். அங்கே திருக்கோயிலை வலஞ்செய்து கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் செம்பொருளாகிய வேதவிழுப்பொருளை, நீலகண்டப் பெருமானைப் பொருளாகக்கொண்டு` மடையில் வாளைபாய` என்னும் பதிகத்தால் கைத்தாளம் இட்டுப்பாடி யருளினார். அதனைக்கண்ட இறைவன் கனிந்து திருவைந் தெழுத்தெழுதிய செம்பொற்றாளத்தை ஈந்தருளினார். தாளம் வையம் எல்லாம் உய்யவரும் மறைச்சிறுவர் கைத்தலத்து வந்தது. அவற்றைப் பிள்ளையார் கையேற்றுத் திருமுடிமேல் வைத்து ஏழிசையுந்தழைத்தோங்க இன்னிசைப் பதிகம் பாடி யருளினார். இப்பதிகத்தின்

திருக்கடைக்காப்புச் செய்யுளைச் சேக்கிழார் பெருமான்` தக்கதிருக்கடைக்காப்பு` என்கிறார்கள்.

**மடையில் வாளை பாய மாதரார்**
**குடையும் பொய்கைக் கோலக் காவுளான்**
**சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீள்**
**உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ. 01**

பொழிப்புரை :



நீரைத் தேக்கி வெளிவிடும் மடையில் வாளை மீன்கள் துள்ளிப் பாயுமாறு பெண்கள் கையால் குடைந்து நீராடும் பொய்கைகளை உடைய திருக்கோலக்காவில் எழுந்தருளியுள்ள இறைவன், சடைமுடியையும், அதன்கண் பிறையையும், திருமேனி முழுவதும் திருநீற்றுப்பூச்சையும் இடையில் ஆடையாகக் கீள் உடையையும் கொண்ட உருவம் உடையவனாய் இருப்பது ஏனோ?

குறிப்புரை :

இது மாதர் நீராடுவதால் வாளைமீன் துள்ளும் பொய்கைக் கரையிலுள்ள கோலக்காவிலுள்ளவன், சடையும் பிறையும் தாங்கி, சாம்பலைப்பூசி, கீள்உடுத்து இருக்கின்ற வடிவத்தைக் கொண்டது ஏனோ என்கின்றது. தலமோ மாதர் நீராட வாளை மடையில் பாயும் வளம் பொருந்திய தலம். அதற்கேற்ப இவர் அணியணிந்து, சாந்தம்பூசி, பட்டுடுத்து வாழாது இங்ஙனமாய திருக்கோலத்தைக் கொண்டதேன்? கீளுடை - கீளோடு கட்டின கோவண உடை. குருவருள்: இப்பாடலில் கீள் உடை என்பதே சரியான பாடம். கீள் என்பது கீளப்பட்ட அஃதாவது கிழிக்கப்பட்ட வாராகும்.`கீளார் கோவணமும்` என்ற

சுந்தரர் தேவாரமும் காண்க. சடை இறைவனது எண்குணங்களுள் அளவிலாற்றலுடைமையைக் குறித்தது. `கடுத்து வரும் கங்கைதனைக் கமழ்சடை ஒன்று ஆடாமே தடுத்தவர்` என்ற பிள்ளையார் வாக்கும் காண்க. எண்குணங்களுள் பிறை, பெருமான் கருணையாளன் என்பதை நினைவுறுத்துகிறது. தவறு செய்தவன் உணர்ந்தால் மன்னித்து அருள் வழங்கும் கருணை இதில் புலப்படுதல் காணலாம். சாம்பற் பூச்சும், கீள் உடையும் பரமனின் பற்றற்ற நிலையைக் குறிப்பன. எல்லாம் இருந்தும் தான் ஒன்றும் அநுபவியாமல் யோகியாயிருந்து உயிர்கட்கு யோகநெறி காட்டி விடுதலை செய்பவன் என்பதைக் குறிப்பது. (thevaaram.org)

திருச்சிற்றம்பலம்